**விமர்சனம் - 29**
**கண், காது இல்லாத ஊடகங்கள்**

ஐக்கிய நாடுகள் மனிதாபிமான (Humanitarian Day) தினம் ஆகஸ்ட் மாதம் 18ம் திகதியாகும். ஐக்கிய நாடுகள் சபையால் முதன் முதலாக இத்தினம் உத்தியோகபூர்வமாக கடந்த புதன்கிழமை அதாவது ஆகஸ்ட் 19ஆம் திகதி அனுஷ்டிக்கப்பட்டது. இத்தினம் அனுஷ்டிக்கப்பட்டபோது இலங்கை சரித்திரத்தில் மனிதனால் உருவாக்கப்பட்ட அனர்த்தத்துக்கு சிக்கிய பெருந்தொகையான மக்கள் மனிதாபிமான தேவைகள் அதே போல் மனித உரிமைகளை இழந்து பெருந்துன்பங்களை அனுபவித்துக் கொண்டிருக்கின்றார்கள் என்பதை இலங்கை வாசிகள் அறிந்திருக்கின்றார்களா என்பது கேள்விக்குறியாகும். கண்டும் காணாதது போலிருக்கின்றார்கள் அல்லது தெரிந்திருந்தும் தமக்கு சம்பந்தமில்லாதது என்று இருக்கின்றார்கள். அல்லது இந்த அவலத்தைப் பார்க்க கண் இல்லாத காரணத்தால் கேட்பதற்கு காதுகள் இல்லாத காரணத்தால் கவலைப்படாமல் இருக்கின்றார்கள். நாட்டின் மக்களுக்கு பார்ப்பதற்கு கண்களையும் கேட்பதற்கு காதுகளையும் ஊடகங்கள் வழங்கும் தகவல்களின் மூலமே பெற்றுக் கொடுக்கப்படுகின்றது. ஊடகங்கள் மூலம் இப்பொறுப்பு நிறைவேற்றப்படாவிட்டால், ஊடகங்களுக்கு இப்பொறுப்பை நிறைவேற்ற தடைகள் இருக்குமானால் ஊடகங்களின் முக்கியப் பொறுப்பான மக்களுக்கு சார்பாகவிருப்பதென்பது மீறப்படுகின்றது. மக்களுக்கு சார்பாகவிருக்காத, மக்களுக்காக பொறுப்புகளை நிறைவேற்றாத ஊடகங்களால் நாட்டுக்கும் நன்மை கிடைக்கப்போவதில்லை.

எப்படியிருந்தும் ஊடகங்களுக்குள்ள இந்த சமூகப் பொறுப்பு நிறைவேற்றும் விதத்தை ஆய்வு செய்து நாம் எழுதிய முதலாவது பத்தியை மீண்டும் வாசிக்க வேண்டிய நிலை இன்று வடக்கில் இடம்பெயர்ந்த மக்களுக்கு உருவாகியுள்ளது. அந்தப் பத்தியில் நாம் யுத்தம் காரணமாக முகாமுக்கு முகாம் மீண்டும் மீண்டும் இடம்பெயர்ந்து வாழ்ந்த வன்னி மக்களுக்கு கடும் மழை காரணமாக எதுவுமே செய்து கொள்ள முடியாத நிலை ஏற்பட்டதாக எழுதியிருந்தோம். விஷேடமாக அதில் எமது கவனத்துக்கு வந்தது என்னவென்றால் தமிழ் பத்திரிகைகள் தவிர்ந்த ஏனைய எந்தவொரு ஊடகமும் வெள்ளத்தால் முகாம்கள் மூழ்கியதாலும் மோதல்கள் காரணமாக போக்கிடமின்றி தவித்த மக்கள் குறித்து எந்தச் செய்தியையும் வெளியிடாதது தான். ஒரு வாரத்தின் பின்னர் தெற்கில் வெள்ளம் ஏற்பட்டபோது பெரிய அளவில் செய்திகளை வெளியிட்ட சிங்கள ஆங்கிலப் பத்திரிகைகளுக்கு வடக்கில் ஏற்பட்ட வெள்ளம் குறித்து எழுதியதென்னவென்றால் கருத்தளவு வெள்ளத்துக்கு மத்தியிலும் யுத்தத்துக்கு தயாராகும் படையினர் குறித்து மட்டுமே. நாம் அந்தப் பத்திக்கு “தெற்கில் எமக்குத் தெரியாத வடக்கின் வெள்ளம்” எனத் தலைப்பிட்டோம். கடந்த வெள்ளிக்கிழமை (14) அளவில் வெள்ளத்தில் மூழ்கிய வவுனியா இடம்பெயர்ந்தோர் வாழும் முகாம்களில் மக்கள் முகம்கொடுத்த நிலை குறித்து இந்நாட்டு ஊடகங்கள் அறிக்கையிட்டுள்ள விதத்தை ஆய்வு செய்த போது கடந்த அக்டோபர் மாத இறுதியில் எம்மால் எழுதப்பட்ட பத்திக்கு இட்ட தலைப்புக்கு ஏற்ற ஊடகப் பாவனையை இன்று பார்க்கும் போது அன்றை விட இன்று மேலும் கவலையளிப்பதாகவுள்ளது.

அன்று யுத்தம் நடைபெற்ற யுத்த வலயத்துக்குள் தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியாமற் போனதால் அறிக்கையிட முடியவில்லையென சமாதானம் கூறக்கூடியதாகவிருந்தது. இருந்தும் தமிழ் பத்திரிகைகளும் இணைய தளங்களும் புகைப்படங்களுடன் செய்திகளை வெளியிட்டிருந்தன. அந்த மூலங்களோ அல்லது புகைப்படங்களோ ஏனைய ஊடகங்களுக்குக் கிடைக்கவில்லையா? எப்படியிருந்தும் அதற்கு யுத்தத்தைக் காரணம் காட்டினாலும் இன்று யுத்தம் முடிவடைந்து விட்டது. தமது வாழ்விடங்கள், தாம் தேடிய சொத்துக்கள், குழந்தைகள், கணவர், மனைவி, பெற்றோர், உறவினர்களை ஏதோவொரு வகையில் இழந்து இன்று அந்த மக்கள் உலகின் பாரிய திறந்த வெளிச்சிறைச்சாலயென வர்ணிக்கப்படும் இடம்பெயர் முகாம்களில் சிக்குண்டிருக்கின்றனர். அவர்களிருப்பது அன்று யுத்தம் நடைபெற்ற வன்னிக்கு இப்பக்கமுள்ள வவுனியா மாவட்டத்திலாகும். கடந்த சில தினங்களுக்கு முன்னர் திடீரெனப் பெய்த கடும் மழையால் அவர்கள் பாதிக்கப்பட்டபோது அவர்கள் மனிதாபிமான தேவைகள் நிறைவேற்றப்படாமல், சுதந்திரமாக நடமாட முடியாமல், ஒன்றாக குடும்பமாக வாழும் உரிமையை இழந்த நிலையிலேயே இருந்தார்கள். இந்த அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டதை சவாலுக்குட்படுத்திய அடிப்படை உரிமை மீறல் மனு உச்ச நீதிமன்றத்தில் விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்படவுள்ளது. இதற்கிடையில் யுத்தத்தின் பின்னர் அவர்கள் பிரச்சினை குறித்து வெளியான மிகக் குறைந்த தகவல்களின்படி இடம்பெயர்ந்த சுமார் மூன்று இலட்சம் பேருக்கு போதுமான மலசலகூட வசதிகள் இல்லை. ஐந்து பேர் ஓரளவு

PDF created with pdfFactory Pro trial version www.pdffactory.com

சமாளிக்கக்கூடிய கூடாரமொன்றில் 15 முதல் 20 பேர் தங்குகின்றனர். குடிநீர், உணவு, உடைகள், சுகாதார வசதிகள் போதுமானதாக இல்லை. இதுபோன்ற விடயங்கள் தொடர்பாக தமிழ் பத்திரிகைகள் விஷேடமாகவும் ஆங்கிலப் பத்திரிகைகள் ஓரளவும் சிங்களப் பத்திரிகைகள் மிகக் குறைந்தளவிலும் அறிக்கையிடுவது யுத்தத்தின் பின்னர் மனிதாபிமான செய்திகளை அறிக்கையிடுவது சிறிதளவு சாதகமான போக்கை எம்மால் காணக்கூடியதாகவுள்ளது. இது இவ்வாறிருக்கும் போது கடும் மழை காரணமாக முகாம்களை மூடிக்கொண்டு கரை புரண்டோடிய வெள்ளத்தில், மலசல கூடங்கள் நிரம்பியதால் அக்கழிவுகள் கலந்தது. அந்த மக்கள் தமது கழிவுகள் கலந்த நீரிலேயே மூழ்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இவ்வாறு தமது மலசலம் கலந்த நீரில் மூழ்க வேண்டியேற்பட்டது செல்வதற்கு வழியில்லாத மக்களுக்கல்ல. பொறுப்பேற்க உறவினர்கள் நண்பர்கள் இல்லாத மக்களுக்கல்ல. அரசால் அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டு யுத்தம் முடிவடைந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னரும் தடுத்து வைக்கப்பட்டுள்ள மக்களுக்கேயாகும். இந்த மனித அவலம் குறித்து எடுத்துரைக்க எமது நாட்டு ஊடகங்களுக்கு மேலும் தகவல்களைத் தேடிக்கொள்ள முடியாதெனக் கூற முடியுமா?

முகாம்கள் வெள்ளத்தில் மூழ்கிய 14ஆம் திகதிக்குப் பின்னர் இரண்டு நாட்களுக்குள் இந்நாட்டு ஊடகங்கள் இது குறித்து அறிக்கையிட்டுள்ளது என ஆய்வு செய்யும் ஒருவருக்கு இம்மக்கள் தொடர்பாக தகவல்களைத் திரட்டுவதில் மேலும் பிரச்சினைகள் இருக்கின்றதா என்பதை சிந்தித்துப் பார்க்க முடியாது. மேற்கண்ட நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டதைப் போல் அரசு பெற்றுக் கொடுத்த தீர்வு குறித்து அதிகாரமிக்கவர்கள் தெரிவித்த கருத்துக்களடங்கிய சில செய்திகளை (சுமார் 18) தமிழ் பத்திரிகைகள் (அரச பத்திரிகை தவிர்ந்த) வெளியிட்டிருந்தன. இதில் நான்கு தலைப்புச் செய்திகளும் ஒரு ஆசிரியர் தலையங்கமும் அடங்கும். இன்னும் சில வாரங்களில் ஆரம்பமாகவுள்ள பருவமழைக் காலத்துக்கு முன்னர் இம்மக்களை விடுவிக்கவேண்டுமென விடுக்கப்பட்ட வேண்டுகோள்களையும் தமிழ் பத்திரிகைகள் அறிக்கையிட்டிருந்தன. தலைப்புச் செய்தியுடன் பெரிய வர்ண புகைப்படமொன்றையும் ஒரு பத்திரிகை வெளியிட்டிந்தது. தகவல்களைப் பெறுவதில் சிக்கல்கள் எதுவும் இல்லையென்பதை புகைப்படங்களை ஆய்வு செய்த போது தெளிவாகியது. பிரதான அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களுக்கு மாறுபட்ட வகையில் விளக்கமாக இம்மனித அவலம் குறித்து சில இணையதளங்கள் செய்தி வெளியிட்டிருந்தன. தமிழ் பத்திரிகைகளில் வெளியான புகைப்படங்கள் இணையதளங்களில் வெளியான படங்களை ஒத்திருந்தன. எவ்வாறாயினும் ஒரே மூலங்களில் இவை பெற்றுக்கொள்ளப்பட்டன அல்லது ஒரு மூலத்தில் பெற்று ஒரு இணையதளம் வெளியிட்ட புகைப்படத்தை தேவைக்கேற்ப ஏனைய ஊடகங்கள் பாவித்திருக்கலாம் என எண்ணக்கூடியதாகவிருந்தது. எப்படியிருந்தும் லக்பிம நியூஸ், சண்டே லீடர் பத்திரிகைகள் இரண்டும் இதை தலைப்புச் செய்தியாக சகல விவரங்களுடன் பிரசுரித்திருந்தது கவனிக்கத்தக்கதாகவிருந்தது. மேலும் சில செய்திகளைக் காணக்கூடியதாகவிருந்ததுடன் பெரும்பான்மையான சிங்கள வாசகர்களுக்கான சிங்களப் பத்திரிகைகள் ஐந்து சிறு செய்திகளை வெளியிட்டது அறிக்கையிடலின் வித்தியாசத்தை எடுத்துக் காட்டுவதாகவிருந்தது. ஒரு சிங்களப் பத்திரிகை இம்மழையை மடு ஆலய திருவிழாவுக்கான ஆசிர்வாதமாக மாத்திரமே கண்டிருந்தது. இதற்கும் மேலதிகமாக தெற்குப் பிரதேசங்களில் கடும் மழை பெய்ததால் வெள்ள ஆபத்து ஏற்பட்டிருப்பதாக அறிக்கையிட பல புகைப்படங்களையும் செய்திகளையும் வெளியிட்டிருந்தன. யுத்தத்தின் பின்னர் அறிக்கையிடலில் இவ்வளவு மாறுபாட்டைக் காட்டுவது அதேபோல் மொத்தத்தில் பிரச்சினையின் தன்மையை அறிக்கையிடலில் அதிக முக்கியத்துவமளிக்காதது கவலையளிப்பதாகவுள்ளது.

அறிக்கையிடலில் மாறுபாடும் முக்கியத்துவமளிக்கப்படாததும் இடம்பெயர்ந்த மக்கள் தொடர்பாக பெரும்பான்மையினர் பார்க்க, கேட்க வாய்ப்பு இல்லாமலிருக்கலாம். இந்த பாரிய மனித அவலம் தொடர்பாக கவனம் செலுத்தி அவர்களது பிரச்சினைகளுக்கு தீர்வைப் பெற்றுக்கொடுக்கும் வழியைக் காட்ட முறையாக நடவடிக்கை எடுக்காவிட்டால் மூன்று லட்சத்துக்கும் அதிகமான இடம்பெயர்ந்த மக்களின் நிலை நாளுக்கு நாள் மோசமடையலாம் என நினைக்கும் போதே அச்சமாகவுள்ளது.

**சீதா ரஞ்சனி**
**seetha@cpalanka.org.**

PDF created with pdfFactory Pro trial version www.pdffactory.com